வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 07   17.12.2025 புதன்கிழமை   இதழ் : 351   பக்கங்கள் : 08




# ஸ்டாலினை நாளை சந்திக்கிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## தமிழக அரசியல் தலைவர்களை சந்திப்பதற்காக கஜேந்திரகுமார் தலைமையிலான குழு சென்னைக்கு

**த. பிரதீபன், பு. கஜிந்தன்**
*யாழ்ப்பாணம், டிசெம்பர் 17*

தமிழ்நாட்டுக்கு பயணம் மேற்கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் குழு நாளை வியாழக்கிழமை முதலமைச்சர் மு. க. ஸ்டாலினை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது.

தமிழ் மக்களுக்கான சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கு இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது, இந்திய மீனவர் பிரச்னை உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து இந்தப் பேச்சு அமையும் என்று தெரியவருகிறது.

இந்த சந்திப்புக்கான ஏற்பாடுகளை தமிழ்நாட்டின் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் மேற்கொண்டிருந்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை சென்னையை சென்றடைந்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் குழுவினர், இலங்கையில் சமஷ்டி அரசியல் யாப்பை கொண்டு வருவதற்கான அழுத்தங்களை இந்திய அரசு வழங்கவேண்டும். அதற்காக தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டுக்கு சென்றடைந்துள்ள கஜேந்திரகுமார் பொன்னமபலம் எம். பி. தலைமையிலான இந்தக் குழுவில் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் த. சுரேஷ் , ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க. சுகாஷ், பிரசார செயலாளர் சட்டத்தரணி ந. காண்டீபன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் ஆகியோர்

07

# வராத விடயத்தை எதிர்ப்பதாக தமிழக பயணம் அமையக்கூடாது

## ரெலோ கட்சி அறிவுரை

**பு. கஜிந்தன்**
*யாழ்ப்பாணம், டிசெ. 17*

வராத ஒன்றை எதிர்ப்பதாக தமிழ்த் தேசிய பேரவையின் தமிழ்நாட்டுக்கான பயணம் அமையாமல் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை வழங்குவதை உறுதி செய்யுமாறு தமிழக அரசியல் பிரமுகர்களை வலியுறுத்தும்படியாக அமைய வேண்டும் - இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தெரிவித்துள்ளது.

தமிழ் தேசியப் பேரவையின்

07

# தமிழ்நாட்டு தலைவர்களை சந்திப்பது வரவேற்புக்குரியது

## சித்தார்த்தன் தெரிவிப்பு



**பு. கஜிந்தன்**
*யாழ்ப்பாணம், டிசெ. 17*

தமிழ்த் தேசியப் பேரவையினர் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமை யிலான கூட்டணி) இந்த நேரத்தில் தமிழக அரசியல் பிரமுகர்களை

07

# நாளை கூடுகிறது பாராளுமன்றம்

*கொழும்பு, டிசெ. 18*

நாளை வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

07

# ரன்வல மோசடி செய்திருந்தால் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



*கொழும்பு, டிசெ. 17*

"முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வல தனது கலாநிதிபட்டம் தொடர்பில் மோசடி செய்துள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டால் தேசிய மக்கள் சக்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்", என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

07

# பேரிடரால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை கடத்தும், சுரண்டும் முயற்சிகள் அதிகரிப்பு

## மகளிர், சிறுவர் விவகார அமைச்சு எச்சரிக்கை

*கொழும்பு, டிசெ. 17*

டித்வா புயலுக்கு பின்னர் பாதிக்கப்பட்ட குழந்தைகளை கடத்தும், சுரண்டல் செய்யும் முயற்சிகள் அதிகரித்துள்ளன என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு எச்சரித்துள்ளது.

பேரிடரால் பல குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் பெற்றோரில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்துள்ளனர். பாதிக்கப்பட்ட குழந்தைகளின் துல்லியமான எண்ணிக்கை குறித்து அடுத்த சில நாட்களில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின்

07

# வட மாகாண ஆசிரியர் இடமாற்றங்கள் இரத்து

**த. பிரதீபன்**
*யாழ்ப்பாணம், டிசெ. 17*

வடக்கு மாகாண ஆசிரியர்களின் இடமாற்றங்கள் அனைத்தும் மீளப் பெறப்படுகின்றன என்று கல்வி திணைக்களம் கூறியதை அடுத்து நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு முடிவுறுத்தப்பட்டது.

வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட "சேவையின் தேவை கருதிய இடமாற்றம் -2026" முறையற்றது என இலங்கை ஆசிரியர் சங்கத்தால் யாழ்ப்பாணம் மேல்

07

# நாட்டின் வரி வருமானம் இலக்கை கடந்து சாதனை

*கொழும்பு, டிசெ. 17*

வரிகள் மூலமான வருமானம் இந்த ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கிலும் பார்க்க 5 ஆயிரம் கோடி ரூபாய் அதிகம் ஈட்டப்பட்டுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

"2025 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டு வருவாய் திணைக்களத்தின் வருவாய் இலக்கு 2 இலட்சத்து 19 ஆயிரத்து 500 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த இலக்கை வரலாற்றில் முதன் முறையாக திணைக்களம் கடந்துள்ளது.

07

# உள்நாட்டு உற்பத்தி 5.4 சதவீதம் உயர்வு

*கொழும்பு, டிசெ. 17*

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 5.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. முக்கிய பொருளாதார நடவடிக்கைகளான விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய துறைகளின் வளர்ச்சி உயர்வடைந்துள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024 ஆம்

07

# மாடியிலிருந்து தவறி விழுந்து ஒருவர் பலி!

**பு. கஜிந்தன்**
*யாழ்ப்பாணம், டிசெ. 18*

மாடிக் கட்டடம் ஒன்றில் கட்டட வேலை செய்து கொண்டிருந்தவர் தவறி விழுந்து உயிரிழந்தார்.

தாவடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நீர்வேலி - அச்செழுவை சேர்ந்த மாணிக்கம் தட்சணாமூர்த்தி (வயது 62) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

உயிரிழந்த நபர் நேற்றுமுன்தினம் தாவடி இரு

07

# இருப்பிலுள்ள நெல்லை அரிசியாக்க அனுமதி!

*கொழும்பு, டிசெ. 17*

நெல் சந்தைப்படுத்தல் சபையின் இருப்பிலுள்ள நெல்லை அரிசியாக்கி விநியோகிக்கும் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

2025ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தின் மூலமாக 600 கோடி ரூபாய் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ஒதுக்கப்பட்டது. இந்த நிதி மூலமாக கடந்த சிறுபோகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் தொடர்ச்சியான அரிசி

07

# மதீஷவை ரூ. 61 கோடிக்கு ஏலம் எடுத்த கொல்கத்தா

*அபுதாபி, டிசெ. 17*




இலங்கை வீரர் மதீஷ பத்திரணவை 18 கோடி இந்திய ரூபாய்க்கு - நம் நாட்டு மதிப்பில்

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மலேசிய விமானம் யாழ். வந்தது!



யாழ்ப்பாணம், டிசெ. 17
மலேசியாவில் இருந்து வந்த சிறிய ரக விமானம் ஒன்று, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் தரையிறங்கியது.
மலேசியாவின் ஜோகூர் பாரு செனாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து வந்த விமானத்துக்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது.
இந்த விமானம் இந்த ஆண்டு தரையிறங்கிய சிறிய ரக மூன்றாவது சர்வதேச விமானம் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மண்டைதீவு புதைகுழி வழக்கு:
# விசாரணை அறிக்கையை தட்டச்சு பிரதியாக வழங்க நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 17
மண்டைதீவு புதைகுழி விசாரணை அறிக்கையை கையெழுத்து பிரதியாக வழங்காது தட்டச்சு பிரதியாக வழங்குமாறு பொலிஸாருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.
1990 ஒகஸ்ட் 25, 26ஆம் திகதிகளில் இராணுவம் நடத்திய நடவடிக்கையின் போது, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் மனித படுகொலை நிகழ்த்தப்பட்டது. இதன்போது 80இற்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.
இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட 45 பேரின் உடல்கள் மண்டைதீவின் 2ஆம் வட்டார பகுதியில் கிணறு ஒன்றில் போடப்பட்டு மூடப்பட்டன என்றும் அதற்கு சாட்சியங்கள் உண்டு எனவும் கூறப்படுகிறது.
எனவே, அந்தக் கிணறை அகழ்ந்து உடல்களை வெளிக்கொணர வேண்டும் என்று கூறி தனது மகனை இழந்த ஸ்ரீபன் மரில்டா என்பவர் கடந்த செப்ரெம்பர் மாதம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.
இதன் பிரகாரம் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.
சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து சான்று ஆதாரங்களுடன் விசாரணை அறிக்கையில் மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.
இதன் அடிப்படையில் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்றைய தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை, பொலிஸார் தாம் மேற்கொண்ட விசாரணை அறிக்கையை கையெழுத்து பிரதியாக மன்றில் சமர்ப்பித்தனர்.
இதையடுத்து, விசாரணை அறிக்கையை இன்று புதன்கிழமை தட்டச்சு பிரதியாக வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-03-05)

## பேரிடர் பாதித்த மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



கிளிநொச்சி, டிசெ. 17
பேரிடரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி - புன்னைநீராவி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.
இதன்போது, தெரிவு செய்யப்பட்ட 284 மாணவர்களுக்கு தலா மூவாயிரம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு கிடைத்த நன்கொடைகளை ஒருங்கிணைத்து இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
கிளிநொச்சி மாவட்ட செயலர் சு. முரளிதரன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், கண்டாவளை பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் உட்பட பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## கிளிநொச்சி இளைஞர் கட்டுநாயக்காவில் கைது

கொழும்பு, டிசெ. 17
போலி ஆவணங்களுடன் ஐரோப்பா செல்ல முற்பட்ட கிளிநொச்சியை சேர்ந்த இளைஞர் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.
ஓமான் ஊடாக ஐரோப்பா செல்ல முற்பட்ட 22 வயது இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இவர், கிளிநொச்சி - முழங்காவிலை சேர்ந்த தவராவார்.
நேற்று அதிகாலை 05.20 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்த அவர், அனைத்து விமான அனுமதி நடைமுறைகளையும் முடித்துவிட்டு குடிவரவு பணிமனையில் தனது கடவுச்சீட்டு மற்றும் பிற ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார்.
அவரின் ஆவணங்களில் சந்தேகமடைந்த அதிகாரிகள் தொழில்நுட்ப சோதனை நடத்தினர். இதன்போது, அந்த ஆவணங்கள் போலியானவை என்று கண்டறியப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.
இளைஞரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் தரகருக்கு 30 இலட்சம் ரூபாய் வழங்கி குறித்த கடவுச்சீட்டைப் பெற்றதாகக் கூறினார். (ஐ)

## வட மாகாண பண்பாட்டு விழாவில் வன்னி எம். பிக்கள் புறக்கணிப்பு!

### திலகநாதன் எம். பி. குற்றச்சாட்டு


முல்லைத்தீவு, டிசெ. 17
வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை புறக்கணித்து வடக்கு மாகாண பண்பாட்டு விழா நடைபெற்றதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.
வடக்கு மாகாண பண்பாட்டு விழாவானது நேற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது. இந்த விழா நடைபெற்ற மண்டபத்தின் வாயிலுக்கு முன்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார். (ஐ)

## நெடுந்தீவில் கடற்றொழிலாளர் சங்க கட்டடம் திறந்து வைப்பு!



யாழ்ப்பாணம், டிசெ. 17
நெடுந்தீவில் கடற்றொழிலாளர் சங்க கட்டடம் நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
இந்தக் கட்டடம் இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சி. சிறீதரனின் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டிருந்தது. இதன்போது கடற்றொழில் சங்கம் மற்றும் சமாசங்களை சேர்ந்த வர்களின் ஏனைய தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டன.
டித்வா புயல் தாக்கத்தால் கடற்றொழிலாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்ட நிலையில் தமக்கான வாழ்வாதாரத்தைப் பெற்றுத்தருமாறும் கடற்றொழில் சங்கத்தினர் இதன்போது, பாராளுமன்ற உறுப்பினரிடமும் பிரதேச செயலரிடமும் கோரிக்கை விடுத்தனர். (ஐ-03-05)

## நெடுந்தீவு மக்களின் பிரச்னைகளை நேரில் கேட்டறிந்தார் சிறீதரன் எம். பி



யாழ்ப்பாணம், டிசெ. 17
நெடுந்தீவுக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் அங்குள்ள மக்களின் அடிப்படை பிரச்னைகள் தொடர்பில் நேரில் கேட்டறிந்தார்.
இதன்போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 200 அரிசி பொதிகளும் சிறீதரனால் வழங்கி வைக்கப்பட்டன.
மேலும், நெடுந்தீவு பாடசாலைகளில் உயர்தர மாணவர்கள் கலைப் பிரிவை தவிர வேறு பாடங்களை கற்க முடியாத நிலை காணப்படுவதாகவும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது என்றும் சிறீதரன் எம். பிக்கு சுட்டிக்காட்டப்பட்டது.
மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் தமக்கு கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் வீதிகள் புனரமைப்பின்றி காணப்படுகின்றன என்றும் மக்கள் சிறீதரன் எம். பியிடம் தெரிவித்தனர். (ஐ-03-05)

## யாழ். போதனாவில் அத்துமீறியவரை ரூ. 55ஆயிரம் இழப்பீடு வழங்க உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 17
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்து சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியவரை 55 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கடந்த 2024 மே 27ஆம் திகதி காயமடைந்த நபர் ஒருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிவந்து அவசர சிகிச்சை பிரிவு வரை நுழைந்த நபர் அங்கு கடமையில் இருந்த ஊழியர்களுடன் முரண்பட்டதுடன், மேசையிலிருந்த பிறின்ரர் இயந்திரத்தையும் சேதப்படுத்தியிருந்தார்.
இது தொடர்பான காணொளி பதிவுகளும் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் மருத்துவமனை நிர்வாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தது. இதையடுத்து, சந்தேகநபர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.
இது தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று நேற்றைய தினம் தீர்ப்பு அளிக்கப்பட்டது.
அதில், குற்றவாளி மருத்துவமனை நிர்வாகத்துக்கு 55 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது. (ஐ-05)

## ஐஸ் போதைப்பொருளுடன் முல்லைத்தீவில் ஐவர் கைது

முல்லைத்தீவு, டிசெ. 17
ஐஸ் போதைப்பொருளுடன் கணவன், மனைவி உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - மூங்கிலாறு பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். நேற்று முன்தினம் கைதானவர்களிடமிருந்து 2 வாள்கள், 61 ஆயிரம் ரூபாய் பணம், 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 'ஐஸ்' போதைப்பொருள் என்பவை கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
கைதானவர்கள் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு, சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.12.2023 புதன்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழ்நாட்டு மாயை

தமிழ்நாட்டு தலைவர்களை சந்தித்து ஈழத் தமிழர் பிரச்னை தொடர்பில் பேசுவது தமிழர் அரசியலில் மிகவும் பழைய விடயம். இலங்கை தமிழ் அரசு கட்சியை உருவாக்கிய எஸ். ஜே. வி. செல்வநாயகம் காலத்திலேயே தமிழ் நாட்டின் அப்போதைய தலைவர்களான சி. என். அண்ணாத்துரை போன்றவர்களை சந்தித்து பேசிய வரலாறுண்டு. ஈழத் தமிழர் அரசியல் வன்முறை வழியாக மாறிய பின்னரும்கூட, அனைத்து இயக்கங்களும் தமிழ்நாட்டில் முகாம் அமைத்திருந்தன. இவ்வாறான இயக்கங்களில் ஒவ்வொன்றை ஒரு கட்சி ஆதரிக்கும்போக்கும் அதில் உள்ளூர் அரசியல் போட்டியும் காணப்பட்டது.

சிறீ சபாரத்தினம் தலைமையிலான ரெலோவை கருணாநிதி ஆதிரித்தபோது பிரபாகரனை எம். ஜி. இராமச்சந்திரன் ஆதரித்தார். இராமச்சந்திரன் அந்தக் காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வழங்கிய நிதியுதவி விடுதலைப் புலிகளால் விதந்து போற்றப்பட்டது. இதன் காரணமாக விடுதலைப் புலிகள் அமைப்பின்மீது கருணாநிதி அதிருப்தியடைந்த கதையுமுண்டு. பிற்காலத்தில் ஈழத் தமிழர் அரசியலுக்கு ஆதரவானவராகத் தன்னைக் காண்பித்தபோதும்கூட, விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின்போது கருணாநிதி மத்திய அரசின் நிகழ்ச்சிநிரலுக்கு முழுமையான ஆதரவை வழங்கியிருந்தார் என்பது இரகசியமானதல்ல.

அதேவேளை விடுலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்களாகத் தங்களை காண்பித்துக் கொள்ளும் வை. கோபலசாமி மற்றும் உதிரி நபர்கள் சிலர் இப்போதும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறபோதிலும்கூட அவ்வாறானவர்கள் தமிழ்நாட்டு அதிகார அரசியலில் எவ்வித செல்வாக்கும் செலுத்த முடியாதவர்களாக இருப்பதும் இரகசியமானதல்ல.

ஈழத் தமிழ் மிதவாத தலைமைகளும் சரி, பின்னர் தோற்றம் பெற்ற பிரதான ஆயுத இயக்கங்களும் சரி தமிழ்நாட்டுடன் உறவை ஏற்படுத்தியதற்கான பிரதான காரணம் ஒன்றுதான். அதாவது, தமிழ்நாட்டுடன் ஊடாடுவதன் ஊடாக இந்திய மத்திய அரசை அசைக்க முடியும் - அதன் மூலம் இந்திய வெளிவிவகாரக் கொள்கையை ஈழத்தமிழருக்கு சார்பானதாக மாற்றியமைக்க முடியும் என்பதே அனைவரின் நம்பிக்கையாகவும் இருந்தது.

ஆனால், இந்த நம்பிக்கை முற்றிலும் தவறானது என்பதை இறுதி யுத்தத்தின்போது தெளிவாகவே உணரமுடிந்தது. தமிழ்நாட்டால் இந்திய வெளிவவகாரக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றால் இன்றுவரையில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன? இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளும் அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிக்குப்பட்டிருந்த பொது மக்களும் கொல்லப்படக்கூடிய யுத்த சூழல் இருந்தபோதுகூட, தமிழ்நாட்டால் எதனையும் செய்ய முடியவில்லை. இது எதனை உணர்த்துகிறது?

இன்று தமிழ்நாட்டு மீனவர்களால் வடபுல மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டு முதலமைச்சரோ மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பிக் கொண்டிருக்கிறார். மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு கொழும்பின்மீது அழுத்தங்களை பிரயோகிக்குமாறு கோரிவருகிறார். ஆனால், தங்களுடைய மீனவர்கள் அத்துமீறி இலங்கையின் கடல் எல்லைக்குள் உள்நுழைவது ஒரு சட்டவிரோதமான விடயம் என்பதையோ, அதனைத் தடுத்து நிறுத்தும் பொறுப்பு தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கு உண்டு என்பதையோ இன்றுவரையில் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒப்புக்கொள்ளவில்லை. மாறாக, அத்துமீறி மீன்பிடிப்பில் ஈடுபடுபவர்களை கைது செய்வது தவறு என்கிறார். இந்த நிலையில், தமிழ்நாட்டால் இந்திய மத்திய அரசின்மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியும். அதனால் இந்திய வெளிவிவகார கொள்கையை மாற்றியமைக்கலாம் என்பது ஓர் அரசியல் மாயை.

உண்மையில், ஈழத் தமிழரின் உரிமைகள் தொடர்பில் ஒரு விடயத்தை தமிழ்நாடு சுட்டிக்காட்ட முடியும் என்றால், “இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மீதான கடப்பாட்டை இந்தியா நிறைவேற்ற வேண்டும் - அது இந்தியாவின் கடமையாகும்”, என்பதை தமிழ்நாட்டை ஆளும் அரசாங்கம் சுட்டிக்காட்டலாம் - அதற்கு ஒரு பெறுமதியுண்டு.

**பல்கலைக்கழக அனுமதி மறுப்பு:**

# தூதரக ஆலோசகரின் மகன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு ஜன.12 விசாரணை!

கொழும்பு, டிசெ. 17

பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து ரஷ்யாவுக்கான முன்னாள் பாதுகாப்பு ஆலோசகரின் மகன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றம் விசாரிக்க உள்ளது.

மனுதாரர் தம்சித் ஜயரத்ன, கொழும்பு ரோயல் கல்லூரியின் முன்னாள் மாணவர்.

அவரது தந்தை குரூப் கப்டன் சரோஜ் ஜயரத்ன 2023 ஜூலையில் ரஷ்யாவுக்கான இலங்கை தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து குடும்பத்துடன் மொஸ்கோ சென்றுள்ளார்.

மொஸ்கோவில் உள்ள இந்தியப் பாடசாலையில் கல்வி பயின்ற தம்சித், உயர் தரத்துக்கு இணையான தகுதியில் 4 ‘ஏ’ தரங்களை பெற்றுள்ளார்.

வெளிநாடுகளில் தொடர்ச்சியாக 3 ஆண்டுகள் கல்வி பயிலும் மாணவர்கள், வெளிநாட்டு உயர்தரத் தகுதியின் அடிப்படையில் கட்டணம் செலுத்தி இலங்கை பல்கலைக்கழகங்களில் சேர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதிக்கிறது.

அதேவேளை, தூதரக சேவையிலுள்ளவர்களின் பிள்ளைகள் சேவை அவசியம் காரணமாக 2 ஆண்டுகளுக்குள் இலங்கைக்கு திரும்ப அழைக்கப்பட்டால், விதிவிலக்குடன் பல்கலைக் கழக அனுமதி வழங்கப்படுவதாக மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆனால், மனுதாரரின் தந்தையின் நியமனம் ஆரம்பத்திலேயே 2 ஆண்டுகளுக்கானது என்பதும், அவர் திருப்பி அழைக்கப்படாததும், தம்சித் அங்கு உயர்தரத் தேர்வை நிறைவு செய்ததும் காரணமாக, அந்த விதி விலக்கு பொருந்தாது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதனால், தூதரக ஊழியர்களின் பிள்ளைகளுக்கான திட்டத்தின் கீழ் தம்சித்தின் விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டது.

வழக்கு முதலில் நவம்பர் 28 அன்று எடுத்துக்கொள்ளப்படவிருந்த போதும், பொது விடுமுறை காரணமாக விசாரிக்கப்படவில்லை.

பின்னர் டிசெம்பர் 10 அன்று விசாரணை நடத்தப் பட்டு, அடுத்த ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதிக்கு முன்னுரிமை அடிப்படையில் வழக்கு ஒத்திவைக்கப்பட் டுள்ளது. (அ)

## சிறையில் தக்ஷியுடன் தொடர்பை பேணிய பொலிஸ் சார்ஜன்ட் பணி இடைநீக்கம்!

கொழும்பு, டிசெ. 17

நந்தகுமார் தக்ஷி என்பவருடன் நெருங்கிய தொடர்பை பேணியதாகக் கூறப்படும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளார்.

நேபாளத்தில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட நந்தகுமார் தக்ஷி தற்போது 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைக் கப்பட்டுள்ளார். இவர், புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் ‘கணேமுல்ல சஞ்சீவ’ சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஆவார்.

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட சார்ஜன்ட், சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்ட தக்ஷியுடன் பிஸ்கட்டை பகிர்ந்து உண்டதாகவும், சைகைகள் மூலம் கருத்துக்களை பரிமாறியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. சி.சி.ரி.வி. காட்சிகள் மூலம், அவர் பல தடவைகள் சந்தேகநபர் இருந்த சிறைக்கூடத்துக்கு அருகில் சென்றதும் உறுதி செய்யப்பட் டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொழும்பு மாவட்ட குற்றப் பிரிவு மேலதிக விசாரணைகள் நடத்தி வருகிறது. இந்த கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தியும், நந்தகுமார் தக்ஷியும் உட்பட ஆறு பேர் நேபாளத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டனர்.

இஷாரா செவ்வந்தி மற்றும் நந்தகுமார் தக்ஷி இருவரும் தற்போது 90 நாட்கள் தடுப் புக் காவலில் உள்ளனர். (அ)

## ரன்வலவின் மருத்துவ அறிக்கை பொலிஸாருக்கு கிடைக்கவில்லை

**பொலிஸ் ஊடகப் பேச்சாளர்**

கொழும்பு, டிசெ. 17

விபத்துக்குள்ளான முன்னாள் சபாநாயகரும் பாராளுமன்ற உறுப்பினருமான அசோக ரன்வலவின் மருத்துவ அறிக்கை இதுவரை பொலிஸாருக்குக் கிடைக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யூ. வூட்லர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மருத்துவ அறிக்கை கிடைத்த பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பில் அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

கடந்த வியாழக்கிழமை இரவு பாராளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல செலுத்திச் சென்ற ஜீப், மற்றுமொரு கார் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் காரில் பயணித்த சிறு குழந்தை உட்பட மூவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

எவ்வாறாயினும், விபத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல கைது செய்யப்பட்ட நிலையில், பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டிசம்பர் - 17 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - மார்கழி 02
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திரையோ...

**மேடம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். பெரிய பொறுப்புகளை ஏற்பீர்கள். நட்பால் ஆதாயம் அடையும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும்.

**கடகம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். புது வேலை கிடைக்கும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். தோற்றப்பொலிவு கூடும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. பணிகளை விரைந்து முடிப்பீர்கள். திருப்தி நிறைந்த நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் வேலைகளை இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**தனுசு**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள். மேலதிகாரிகளுக்கு ஆலோசனை தருவீர்கள்.

**மகரம்**
சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நண்பர்களால் அனுகூலம் உண்டு. விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செய்ய தொடங்குவீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வியாபாரத்தில் சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

# முல்லைத்தீவில் வெள்ள அபாய எச்சரிக்கை

முல்லைத்தீவு, டிசெ. 17

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

ஏற்கனவே முத்துஐயன்கட்டு குளத்தின் நீர்மட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் அதன் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

மேலும், நயினாமடு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் பெய்து வரும் மழையால் நீர்வரத்து அதிகரித்து வருவதால், முத்துஐயன்கட்டு குளத்தின் வான் கதவுகள் தொடர்ச்சியாக திறந்த நிலையில் வைக்கப்படும் என்றும் இதன் காரணமாக, கீழ் பகுதிகளில் வசிக்கும் மக்கள், குறிப்பாக மன்னாகண்டல் - வசந்தபுரம் பகுதிகளில் உள்ளவர்கள் மிகுந்த விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நீர்மட்டம் உயர்வதை கவனித்தால், உடனடியாக கிராம உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலாளருக்கு தகவல் வழங்கி,

பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும்.

இதேபோன்று, பண்டாரவன்னி பகுதிகளில் வசிக்கும் மக்களும் கவனமாக இருக்க வேண்டும். வவுனியா வடக்கு பகுதிகளில் பெய்து வரும் மழையால் குருவிச்சை ஆற்றில் நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது.

நீர்மட்டம் உயர்வதை நீங்கள் கவனித்தால், உடனடியாக கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளருக்கு தகவல் வழங்கி, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் என்று முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு தெரிவித்துள்ளது. (எ)

# யாழ்ப்பாணம் பழைய பூங்கா மரபுரிமை சொத்தாக பேணி பாதுக்கப்படவேண்டும்

## இயற்கை நண்பர்கள் இயக்கம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணம் பழைய பூங்கா மரபுரிமை சொத்தாக பேணி பாதுக்கப்படவேண்டும் என்று இயற்கை நண்பர்கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

தாவரவியல் பரிமாணம் அரிதாகிச் செல்லும் பாரம்பரிய முதுமரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுரிமை நடைமுறைகளில் ஒன்று. பழைய பூங்காவில் வானளாவ வளர்ந்து நிற்கும் முதுமரங்கள் பல யாழ்ப்பாணத்தில் இப்பொழுது உயிருடன் இருக்கும் எல்லோரையும்விட, வயதில் மூத்தவை. வாகன நெரிசல் மிக்க யாழ். நகரின் கரிக்காற்றை உறிஞ்சிச் சுத்தம் செய்யும் காபன் வடிகட்டியாக பழைய பூங்காவில் உள்ள மரங்கள் செயல்பட்டு வருகின்றன.

அபிவிருத்தி செயல்பாடுகளின் போது இயற்கையை பாதிக்காத வகையில் குறிப்பாக முதுமரங்களைப் பேணிப் பாதுகாப்பது என்பது உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுரிமை நடைமுறை.

போர்க் காலத்திலேயே பராமரிக்கப்பட்ட ஒரு மரபுரிமை பிரதேசத்தை அபிவிருத்தியின் பெயரால் இயற்கையை அழித்து செய்யும் செயல்பாடு அனைத்தும் பண்பாட்டு இன அழிப்பு என்பதாகவே பலரால் கூறப்படுகின்றது. இது தொடர்பாக இயற்கையை நேசிப்பவர்கள் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

தற்போது உள்ள தலைமுறையைவிட வயதால் மூத்த அந்த மரங்களை வெட்டுவதை மௌனமாக இருந்து ஆதரித்து தமது வேர்களைப் பாதுகாக்க முடியாத ஒரு மக்கள் கூட்டம் திரண்டு ஒரு தேசமாக நிமிரமுடியாது. எனவே, மரபுரிமைச் சொத்துக்களை பேணிப் பாதுகாக்க வடக்கு மாகாண சபையின் ஆளுநர் மற்றும் யாழ். மாநகர சபையின் முதல்வர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இயற்கை நண்பர்கள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

# சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது

வவுனியா, டிசெ. 17

வவுனியாவில் சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

வவுனியாவில் மழை காரணமாக வெள்ளம் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பரவும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. இதனால், டெங்கு நுளம்பை கட்டுப்படுத்தும் விஷேட வேலைத்திட்டத்தை சுகாதார பரிசோதகர்கள் முன்னெடுத்துள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக வவுனியா, பட்டாணிச்சூர் முதலாம் ஒழுங்கையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் சுகாதார பரிசோதகர்கள் ஈடுபட்டபோது குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றை பரிசோதனை செய்யும் போது குறித்த வீட்டில் டெங்கு நுளம்பு இனங்காணப்பட்டுள்ளன.

இதனையடுத்து நுளம்புகளை கட்டுப்படுத்தி அப்பகுதியை சுத்தம் செய்து தமக்கு தெரியப்படுத்துமாறு சுகாதார பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டபோது சுகாதார பரிசோதகர்களுடன் குறித்த வீட்டு உரிமையாளர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன், சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கும் இடையூறு ஏற்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து சுகாதார பரிசோதகர்கள் நெளுக்குளம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற நெளுக்குளம் பொலிஸார் வீட்டு உரிமையாளரை பொலிஸ் நிலையம் வருமாறு தெரிவித்தனர்.

இருப்பினும் பொலிஸாருடனும் குறித்த வீட்டு உரிமையாளர்கள் முரண்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக குறித்த இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-10)

# வவுனியாவில் பொலிஸ் கட்டளையை மீறிய மோட்டார் சைக்கிள் காருடன் மோதி விபத்து

வவுனியா, டிசெ. 17

வவுனியா, வைரவ புளியங்குளம் பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறிச்சென்ற மோட்டார் சைக்கிள் காருடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, வைரவ புளியங்குளம்- வைரவர் கோவில் வீதி ஊடாக நேற்று முன்தினம் இரவு இளைஞர்கள் வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்றபோது அப் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போக்குவரத்து பொலிஸார் அவர்களை நிறுத்த முற்பட்டனர். இருப்பினும், பொலிஸாரின் கட்டளையை மீறி மோட்டார் சைக்கிள் வேகமாக பயணித்த நிலையில் ரயில் நிலைய வீதியிலிருந்து வைரவர் கோவில் வீதி ஊடாக சென்று வைரவர் கோவிலுக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் திரும்ப முற்பட்ட கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-10)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 17

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்பு சொற்பொழிவுத் தொடர் 36 நாளை மறுதினம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் "பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரை இழந்து நிர்க்கதியாகியுள்ள சிறுவர்கள் மூலம் சட்டவிரோதசெயல்கள்!

## பொலிஸார் கடும் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 17

**டித்வா புயலினால் ஏற்பட்ட அனர்த்தங்களின் காரணமாக பெற்றோரை இழந்து நிர்க்கதியாகியுள்ள சிறுவர்களின் பாதுகாவலர்களாக முன்னிலையாகி நிவாரணம் வழங்கும் போர்வையில் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.**

இவ்வாறு நிர்க்கதியாகியுள்ள சிறுவர்கள் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம், வீட்டுப் பணிகளில் ஈடுபடுத்தல் மற்றும் சிறுவர்களை கொடுமைக்குட்படுத்தும் செயற்பாடுகள் உள்ளிட்ட குற்றச்செயல்களுக்கு உள்ளாவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பல்வேறு நபர்கள், இவ்வாறு நிர்க்கதியாகியுள்ள சிறுவர்களுக்கு அரவணைப்பு வழங்குதல் மற்றும் அவர்களின் எதிர்கால வாழ்க்கையை வெற்றிகரமாக்குவதற்காக அவ்வாறான சிறுவர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி சமூக வலைத்தளங்களினூடாக பதிவொன்று அதிகம் பகிரப்பட்டு வருகின்றமையை பொலிஸ் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு சமூக வலைத்தளங்களினூடாக கைபேசி இலக்கங்களை பதிவிடும் ஒரு சில அடையாளம் தெரியாத நபர்கள், பாதுகாப்பற்ற நிலைமையில் இருக்கும் சிறுவர்கள் தொடர்பில் தகவல் கோரியதன் பின்னர் அந்த சிறுவர்களின் பாதுகாவலர்களாக முன்னிலையாகி நிவாரணம் வழங்கும் போர்வையில் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனர்த்தங்களால் நிர்க்கதியான சிறுவர்களை பொறுப்பான பாதுகாவலர்களிடம் ஒப்படைத்து அவர்களை பாதுகாப்பான முறையில் ஊக்குவித்தல் அல்லது தத்தெடுப்பதற்கு யாருக்காவது உண்மையான தேவை இருக்குமாக இருந்தால் இலங்கையில் நடைமுறையில் இருக்கும் சாதாரண பொதுச் சட்டத்தின் அடிப்படையில் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அந்த செயற்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்குமென சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக ஒழிப்பு மற்றும் விசாரணை படையணி அறிவித்துள்ளது.

அதற்கமைய, சமூக வலைதளங்களினூடாக இவ்வாறு தொலைபேசி இலக்கங்களை பதிவிட்டு, பாதுகாப்பின்றி இருக்கும் சிறுவர்கள் தொடர்பில் விசாரிக்கும் அடையாளம் தெரியாத நபர்களுக்கு அந்த சிறுவர்களின் தகவல்களை வழங்குவதை தவிர்த்துக்கொள்ளுமாறு பொலிஸ் திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ஒரு மில்லியனுக்கும் அதிகமானோரின் பிறப்பு, திருமண சான்றிதழ்கள் அழிவு!

கொழும்பு, டிசெ. 17

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கினால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் பிறப்பு மற்றும் திருமணப் பதிவுச் சான்றிதழ்கள் அழிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

கிட்டத்தட்ட 2.2 மில்லியன் மக்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் மேற்குறித்த ஆவணங்களை இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சுமார் 22 மாவட்டங்களில் பதிவுச் சான்றிதழ்கள் இலவசமாகவும் ஒரு நாள் துரித சேவை மூலமாகவும் வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமின்றி அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களின் இறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக அரசின் கிளீன் சிறீலங்கா திட்டத்தின் கீழ் சில பகுதிகளில் நடமாடும் சேவைத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்கள் இல்லாதவர்கள் தொடர்பான தரவுகள் மாவட்ட துணைப் பதிவாளர்களால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (அ)

# மூன்றாம் தவணைப் பரீட்சை தரம் 6 முதல் 10 வரை இல்லை

கொழும்பு, டிசெ. 17

2025 ஆம் கல்வி ஆண்டின் மூன்றாம் தவணைக்காக தரம் 6 முதல் தரம் 10 வரையிலான வகுப்புக்களுக்கு தவணைப் பரீட்சைகள் நடாத்தப்படாதென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், குறிப்பாக அனைத்துப் பாடசாலை அதிபர்களும் இந்த அறிவுறுத்தலை கட்டாயமாக நடைமுறைப்படுத்தவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 11 ஆம் தர மாணவர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சையை நடத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் இலங்கைக்கு அவசர உதவி

கொழும்பு, டிசெ. 17

டித்வா புயல் கடுமையாக பாதித்த இலங்கைக்கு எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் மற்றும் டுபாய் மனிதநேயம் இணைந்து அவசர உதவி வழங்கும் சேவையை அமைத்துள்ளன.

இரண்டு வாரங்கள் நடைபெறும் இந்த திட்டத்தில், தினசரி விமானங்களில் 100 தொன் பொருட்கள் இலவசமாக கொழும்புக்கு அனுப்பப்படும்.

முதலாவது பொதியில் பிஸ்கட்கள், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் அவசர உதவிப் பொருட்கள் அடங்கியுள்ளன.

இது தொட்பில் எமிரேட்ஸ் தலைவர் கூறியதாவது:- இலங்கை மக்களுக்கு உதவ எமது வசதிகளை முழுமையாக பயன்படுத்துகிறோம். தினசரி விமானங்களில் பொருட்கள் ஏற்றும் பகுதியை ஒதுக்கி, அவசியமான உதவிகளை நிலையான முறையில் அனுப்புவோம்-என்றார்.

டுபாய் மனிதநேயம் தலைவர் கூறியது: "இந்த கூட்டாண்மை நிவாரண உதவியை விரைவாக, திறம்பட வழங்க உறுதி செய்கிறது-என்றார். (அ)

# சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு சிறப்பு விடுமுறை

கொழும்பு, டிசெ. 17

வெள்ளம், மண்சரிவு காரணமாக பணிக்கு வராத அரசு ஊழியர்களுக்கு சிறப்பு விடுமுறை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் நேற்று முன் தினம் அனைத்து அமைச்சுச் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களுக்கு இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

அதன்படி, டித்வா சூறாவளி காரணமாக தங்கள் வசிப்பிடத்திலிருந்து பணியிடத்திற்கு பொது போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டதால் பணிக்கு வரமுடியாத அல்லது வீதிகள் மூடப்பட்டதால் அல்லது பேரழிவுகள் காரணமாக பணிக்கு வர முடியாத அதிகாரிகளுக்கு இந்த சிறப்பு விடுமுறை வழங்கப்பட உள்ளது.

இந்த சிறப்பு விடுமுறையைப் பெற, அவர்கள் பணிக்கு வர முடியாததற்கான காரணத்தைக் கூறி நிறுவனத் தலைவரிடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் பிரதேச செயலாளரால் சான்றளிக்கப்பட்ட தங்கள் பகுதியின் கிராம அலுவலரின் பரிந்துரையும் இருக்க வேண்டும்.

பிரதேச செயலாளரால் சான்றளிக்கப்பட்ட அலுவலரின் கோரிக்கையை நிறுவனத் தலைவர் பரிசீலிக்கவேண்டும் என்றும், அதன் துல்லியம் குறித்து அவர் தனிப்பட்ட முறையில் திருப்தி அடைந்தால் மட்டுமே, அவர் பணிக்கு சமூகமளிக்க முடியாத நாட்களின் எண்ணிக்கைக்கான சிறப்பு விடுப்புக்கான ஒப்புதலுக்காக அதைத் துறைத் தலைவரிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களுக்கு மட்டுமே இந்த சிறப்பு விடுப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழை வீழ்ச்சி மேலும் அதிகரிப்பு

## பதுளை, கண்டி, நுவரெலியா உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு மண்சரவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 17

கிழக்கில் அலை வடிவிலான காற்றுப் பெயர்ச்சியின் தாக்கம் காரணமாக நாட்டின் மழை நிலைமையில் ஓரளவு அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மழை பெய்யும்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். மத்திய மலைப் பிரதேசத்தின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மணிக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் இடைக்கிடையே பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலைமை காணப்படலாம். இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக ஏற்படக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படும் அனர்த்தங்களைக் குறைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கண்டி மாவட்டத்தில் உடுதும்பர, தொலுவ, மெததும்பர, கங்கா இஹல கோரள மற்றும் மினிப்பே பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது. மேலும், பதுளை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கும் தொடர்ந்தும் மண்சரிவு அபாயம் குறித்த இரண்டாம் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இயற்கை அனர்த்தங்களால் இதுவரை 643 பேர் உயிரிழந்ததோடு, 183 பேர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. மேலும், 4 இலட்சத்து 59ஆயிரத்து 726 குடும்பங்களைச் சேர்ந்த 16 இலட்சத்து 469 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 22, 050 குடும்பங்களைச் சேர்ந்த 71 ஆயிரத்து 472 பேர் தொடர்ந்தும் 739 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்தோடு 6,193 வீடுகள் முழுமையாகவும், 95 ஆயிரத்து 456 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

பாடசாலை சுற்று சூழலில்

# நுளம்பு கட்டுப்படுத்தும் புகை விசிறும் நடவடிக்கை




பொத்துவில், டிசெ. 17

நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு மீண்டும் நேற்று செவ்வாய்க்கிழமை மீளவும் திறக்கப்பட்டதை முன்னிட்டு அம்பாறை,

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் பாறூக் வழிகாட்டலின் கீழ் புகை விசிறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொத்துவில் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்களும், நுளம்புக்கட்டுப்பாட்டு உதவியாளர்களும் இணைந்து

நுளம்புத் தாக்கத்திலிருந்து மாணவர்களை பாதுகாக்கும் நோக்கில் பாடசாலைகளின் சுற்றுச்சூழல்கள் துப்புரவு செய்யப்பட்டு நுளம்புகளை கட்டுப்படுத்தும் புகை விசிறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

# மீனவர்களின் பாதிப்பு தொடர்பில் திருகோணமலையில் கலந்தாய்வு

திருகோணமலை, டிசெ. 17

கடந்த காலங்களில் ஏற்பட்ட பேரிடர் சூழ்நிலைகள் காரணமாக மீனவ சமூகம் எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்னைகள் குறித்து ஆராய்ந்து, அவற்றைத் தீர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன தலைமையில் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. இதில் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் அதிகாரிகள், மீன்வளத் துறை அதிகாரிகள், மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பேரிடர் காரணமாக அழிவடைந்த படகுகள், வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு இழப்பீடு வழங்கும் செயல்முறையை விரைவுபடுத்துதல், கோட்பே மீன்வளத் துறைமுகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க பாதுகாப்பை அதிகரித்தல், தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்க ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துதல், கோட்பே மீன்வளத் துறைமுகத்தை விரிவுபடுத்தல் போன்ற பல விடயங்கள் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன. (எ-12)

# இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தின் வான்கதவு திறப்பு

புத்தளம், டிசெ. 17

நேற்றுக்காலை 07. 30 மணியளவில் புத்தளம், இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 1,000 கன அடி நீர் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள அபாயம் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# தொல்பொருள் திணைக்கள பதாகை அகற்றப்பட்ட வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, டிசெ. 17

வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட குழுவினரால் தொல்பொருள் திணைக்கள பதாகை அகற்றப்பட்டமை தொடர்பிலான வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் இடங்கள் என அடையாளப்படுத்தும் விதமாக தொல்பொருள் திணைக்களத்தால் நிறுவப்பட்ட வழிகாட்டிப் பதாகைகளை கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட குழுவினர் அகற்றியமை தொடர்பில் தவிசாளர் உள்ளிட்ட ஐவர் மீது தொல்பொருள் திணைக்களத்தின் முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் கடந்த நவம்பர் 25 ஆம் திகதி வாழைச்சேனை நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கில் உரிய பிரதிவாதிகளுக்குப் பிணை வழங்கப்பட்டு நேற்று முன்தினம் குறித்த வழக்கு மீள் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதன்போது, பொலிஸாரால் மேலதிக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ)

# சுமணரத்ன தேரருக்கு வெளிநாடு பயணத்தடை

மட்டக்களப்பு, டிசெ. 17

தமிழ் மக்களை வெட்டிக் கொல்ல வேண்டும் என்று கூறிய அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிடியாணை பிறப்பித்து, வெளிநாட்டுக்கு செல்வதற்கு பயணத்தை விதித்து எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டார்

கடந்த 2023 - 10- 23 ஆம் திகதி ஊடகங்களுக்கு சுமணரத்ன தேரர் வழங்கிய செவ்வியின் போது வடக்கில் உள்ள தமிழ் மக்களையும் தெற்கில் உள்ள தமிழ் மக்களையும் வெட்டிக் கொல்ல வேண்டும்" என தெரிவித்தார்.

தேரர் தெரிவித்த இந்த வன்முறையான கருத்துக்கு எதிராக 2023-10-27ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணி தனுக்க றனஞ்சக என்பவர் முறைப்பாடு செய்ததுடன் சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் உள்ள சட்டத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு விசாரணையின் போதே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

# கிராம உத்தியோகத்தருக்கு எதிராக மட்டக்களப்பில் மக்கள் போராட்டம்

மட்டக்களப்பு, டிசெ. 17

மட்டக்களப்பு, புன்னைச்சோலை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கோரியும், கிராம உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யக்கோரியும் பொதுமக்கள் நேற்று முன்தினம் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டனர். இதனையடுத்து அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, குறித்த கோரிக்கைகள் மற்றும் பாதிப்பின் உண்மைத் தன்மை குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாக வழங்கிய உறுதிமொழியை அடுத்து முற்றுகை போராட்டம் கைவிடப்பட்டது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்ட சீரற்ற கால நிலையால் புன்னைச்சோலை கிராமத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நிவாரணமோ? அல்லது நிதியுதவியோ? வழங்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டி, பாதிக்கப்பட்ட மக்கள் புன்னைச்சோலை பகுதியில் ஒன்று திரண்டனர்.

நூற்றுக்கணக்கான பெண்கள் ஒன்றுகூடி, கிராம உத்தியோகத்தரை இடமாற்றுமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் கோரி ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தனர். அத்தோடு, மாமாங்கம் ஆலய வீதி, பார் வீதி, அரசடி சுற்றுவட்டம் மற்றும் நகர் மணிக்கூட்டுக் கோபுரம் வழியாகச் சென்று இறுதியாக மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தை அடைந்து அங்கு முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு வந்த கந்தசாமி பிரபு எம். பி., ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார். கிராம உத்தியோகத்தர் தொடர்பான புகார்கள் குறித்தும், நிவாரணம் தொடர்பாகவும் தீர்க்கமான விசாரணை செய்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக அவர் வாக்குறுதி அளித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (எ)

# காரைதீவு பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்

காரைதீவு, டிசெ. 17

அம்பாறை மாவட்டம், காரைதீவு பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நேற்றுக்காலை நிறைவேறியது.

தவிசாளர் சு. பாஸ்கரன் தலைமையில் பிரதேச சபை சபா மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின்போதே நிதியறிக்கை நிறைவேற்றப்பட்டது.

அடுத்த வருடத்துக்கான இந்த வரவு- செலவுத்திட்டத்துக்கு 08 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். மூவர் எதிர்த்து வாக்களித்தனர். (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6,200 வீடுகள் முற்றாக அழிவு!

கொழும்பு, டிசெ. 17

டித்வா சூறாவளியால் இலங்கையில் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளதாகவும், 6,200 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் 96,545 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

அழிக்கப்பட்ட வீடுகளில் பெரும்பாலானவை, சூறாவளியின் கடுமையான தாக்கத்தை எதிர்கொண்ட கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 731 பாதுகாப்பு மையங்களில், 22,348 குடும்பங்களைச் சேர்ந்த 70,297 பேர் தற்போது தஞ்சம் அடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் கூறியுள்ளது.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு அதிகாரிகள் தொடர்ந்து நிலைமையைக் கண்காணித்து நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றனர். (அ)

## போதைப்பொருளுடன் யாழில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணம் - பொம்மைவெளி பகுதியில் இளைஞர் ஒருவர் 210 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஐ-05)

## தோட்ட தொழிலாளர்கள் 21 பேர் நன்கொடை

நுவரெலியா, டிசெ. 17

மஸ்கெலியாவில் உள்ள 21 தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் அன்றாட ஊதியத்திலிருந்து தலா 1,000 ரூபாய் வீதம் அரசாங்கத்தின் "மீண்டெழும் இலங்கை" நிதியத்துக்கு நன்கொடை அளித்துள்ளனர்.

மஸ்கெலியாவின் மவுஸ்ஸாகலை பிரிவில் உள்ள ஹபுகஸ்தென்னவின் கீழ் பகுதியைச் சேர்ந்த 21 தோட்டத் தொழிலாளர்களால் இவ்வாறு நன்கொடை வழங்கப்பட்டது.

நிகழ்வில் பேசிய தோட்டத் தொழிலாளர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிக்க தங்களால் இயன்ற எந்த வகையிலும் உதவ முடிந்ததில் மகிழ்ச்சி அடைவதாக கூறினர். (எ)

### ஸ்டாலினை...

அடங்குவர். அங்கு ஒரு வாரம் தங்கியிருக்கும் இவர்கள் தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்களை சந்தித்து பேச்சுகளில் ஈடுபடுவர்.

இந்தப் பயணம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்-

"தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வாக இலங்கை அரசாங்கம் ஏக்கிய இராச்சிய அரசியல் யாப்பை திணிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், அதனைத் தடுத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் கொடுக்கவேண்டும். அந்தவகையில் பிராந்திய வல்லரசான இந்திய அரசு இலங்கைமீது அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான நிலையை ஏற்படுத்த தமிழக அரசியல் தலைவர்கள் குரல்கொடுக்க வேண்டிய அவசர தேவை எழுந்துள்ளது.

இந்தநோக்கத்துக்காக தமிழக அரசியல் தலைவர்களைச் சந்தித்து இவ்விடயங்களை தெளிவுபடுத்தி அவர்களது ஆதரவை பெற்றுக்கொள்ளும் நோக்கில் சென்னை சென்று அரசியல் தலைவர்களுடன் இந்த வாரம் சந்திப்புகளில் ஈடுபடவுள்ளோம் - என்றார். (அ-ஐ)

### வராத...

தமிழக பயணம் குறித்து அந்தக் கட்சியின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் குறிப்பிடுகையில்,

"ஏக்கிய இராச்சிய அரசியல் யாப்பில் குறைகள் உள்ளன என்று தெரிவித்து தமிழீழ விடுதலை இயக்கமானது ஏற்கனவே அதை நிராகரித்திருந்தது. அது ஒரு மாதிரி வரைவாக இருந்ததே தவிர, இறுதி வரைவாகக் கொண்டுவரப்படவில்லை.

தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு வேண்டும் என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கமானது முன்வைக்கப்போகின்ற தீர்வுத் திட்டத்துக்கான அழைப்பில் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு பொதுத் தீர்வாக சமஷ்டியை வலியுறுத்த வேண்டும் என்று ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் நாங்கள் இணக்கப்பாடு கண்டுள்ளோம்.

தமிழகத்துக்கான அரசியல் பயணம் என்பது தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்காக தமிழகத்தில் இருக்கின்ற முக்கியஸ்தர்களை சந்திப்பதாக அமைவது வரவேற்கத்தக்கது. ஆனால், வராத ஒரு தீர்வை அல்லது அரசியல் யாப்பை நிராகரிக்கிறோம் என்று கூறி கலந்துரையாடல் செய்வது என்பது எந்தளவுக்கு பயனளிக்கும் என்று தெரியவில்லை.

புதிய அரசியல் யாப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வரவேண்டும் என்ற விடயத்தை கோருவதாக அந்த பயணம் அமைந்தால் அது வரவேற்கத்தக்கது. தமிழ்நாடு மாத்திரம் அல்ல, சர்வதேச பயணங்களில் ஈடுபடுகின்றபோது எமக்கான சமஷ்டி தீர்வை அரசாங்கம் தரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற பயணமாக அது அமைந்தால் ஆரோக்கியமாக இருக்கும் - என்றார். (ஐ)

### ரன்வல...

தனியார் தொலைக்காட்சியின் நேர்காணல் ஒன்றில் பேசிய அவர், "எந்த வகை நடவடிக்கை என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை", என்றும் கூறினார்.

இந்த விவகாரம் குறித்து தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்களும் வாக்களிக்காதவர்களும் கருத்து தெரிவித்து வருகின்றனர். அந்த கருத்துகள் கணக்கில் எடுக்கப்படும். ரன்வல விரைவில் சான்றிதழை சமர்ப்பிப்பதாக கட்சியிடம் உறுதியளித்திருந்தார். ஆனால், இதுவரை சான்றிதழை சமர்ப்பிக்கவில்லை.

அமைச்சரவை செய்தியளிப்பில் தானும் அதையே தெரிவித்தார் என்றும் அது அப்போது ரன்வல கூறிய தகவலின் அடிப்படையிலேயே தெரிவிக்கப்பட்டது எனவும் நளிந்த இதன்போது குறிப்பிட்டார். (அ)

### தமிழ்நாட்டு...

சந்திப்பது ஒரு நல்ல விடயம் என்று தமிழீழ விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

ஏக்கிய ராச்சிய அரசியல் யாப்பை இலங்கை அரசாங்கம் திணிக்க முயற்சிக்கிறது என்று கூறி அதனை எதிர்ப்பதற்கு தமிழக அரசியல் பிரமுகர்களின் ஆதரவை கோரி நேற்றைய தினம் தமிழ்நாடு சென்றனர். இந்த விடயம் தொடர்பில் கருத்துக் கேட்டபோதே சித்தார்த்தன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் எமது பின்னடைவுகள் குறித்து தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர்களுடனேயோ அல்லது வேறு தரப்பினரிடையேயோ கலந்துரையாடி, நிலைமைகளை அவர்களுக்கு தெளிவுபடுத்துவதை ஒரு நல்ல விடயமாகவே நான் பார்க்கிறேன்.

மாறுபட்ட கருத்துகள் - இருக்கின்ற விடயங்கள் குறி த்து பேசினால் அது வேறாக இருக்கும். ஆனால், இந்த சந்திப்பில் மாறுபட்ட கருத்துகள் இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் இருக்காது என நம்புகிறேன். ஏக்கிய ராச்சிய அரசமைப்பை அரசாங்கம் கொண்டுவரப்போவ தாக உறுதியாக எந்த இடத்திலும் கூறவில்லை. ஆகை யால் நாங்களே கற்பனையில் ஒரு விடயத்தை உருவாக்கி விட்டு, அதனை ஒரு சிக்கலாக எடுப்பது நல்லதாக என க்கு தெரியவில்லை. அரசாங்கம் முதலில் தமது கருத்தை சொல்லட்டும் - அந்த அரசியல் யாப்பைக் கொண்டு வரட்டும் - அதன்பின்னர் பார்க்கலாம் - என்றார். (ஐ)

### நாளை...

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

### பேரிடரால்...

படங்களை பகிர்வதை தவிர்க்கவேண்டும் என அமைச்சு பொதுமக்களை கேட்டுள்ளது. இத்தகைய முயற்சிகள் குறித்து கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தகவல் வெளியிட்ட மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சாவித்ரி போல்ராஜ், "பேரிடரால் 87 குழந்தைகள் பெற்றோரில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்துள்ளனர்", என்றும் கூறினார். (அ)

### நாட்டின்...

இலக்கை விட மேலதிகமாக 5 ஆயிரம் கோடி ரூபா வருவாய் பெறப்பட்டுள்ளமை முன்னெப்போதும் இல்லாத சாதனை" - என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிஷாந்த ஜயவீர குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், "வரி வசூலில் ஏற்பட்ட இழப்புகளை குறைத்ததுடன், வரி முறைமைமீது பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரித்ததன் விளைவாக இந்த வெற்றி கிடைத்துள்ளது. இதனால், மக்கள் தங்களின் வரி கடமைகளை முறையாக நிறைவேற்ற முனைந்தனர் - என்று நிதி மற்றும் திட்டமிடல் துறை பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ஐ)

### உள்நாட்டு...

ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பதிவான 3 இலட்சத்து 15 ஆயிரத்து 414.8 கோடி ரூபாயில் இருந்து 3 இலட்சத்து 32 ஆயிரத்து 561.1 கோடி கோடி ரூபாயாக அதிகரித்தள்ளது. இதற்கமைய இந்தாண்டு மூன்றாம் காலாண்டில் மொத்த உற்பத்தி வளர்ச்சி வீதம் நேரான வளர்ச்சியானது 5.4 சதவீதமாக பதிவாகியுள்ளது.

அத்துடன், 2025 மூன்றாம் காலாண்டில் விவசாயம், கைத்தொழில், சேவை நடவடிக்கைகள் அனைத்தும் முறையே 3.6 சதவீதம், 8.1 சதவீதம், 3.5 சதவீதம் என்ற அடிப்படையில் உயர்வடைந்துள்ளன என்றும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

### மாடியிலிருந்து...

மாடி கட்டடம் ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்தச்சமயம் அவர், இரண்டாவது மாடியிலிருந்து தவறி முதல் மாடியில் விழுந்துள்ளார்.

இதில், படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், நேற்று செவ்வாய்க்கிழமை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ)

### வடமாகாண...

நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, இடமாற்றம் வழங்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களின் இடமாற்றங்களையும் மீறப்பெறுவதாக கல்வித் திணைக்களம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றுக்கு தெரியப்படுத்தினார். இதைத் தொடர்ந்து இந்த வழக்கு முடிவுறுத்தப்பட்டது. (ஐ)

### மதீஷவை...

சுமார் 61 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி.

இதன் மூலம், ஐ. பி. எல். ஏல வரலாற்றில் அதிக விலைக்கு விற்பனையான இலங்கை வீரர் என்ற சாதனையை மதீஷ பத்திரண படைத்துள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ. பி. எல்) வீரர்கள் ஏலம் நேற்று அபுதாபியில் நடைபெற்றது. இதில், மதீஷ பத்திரணவுக்கு 2 கோடி இந்திய ரூபாய் அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டது.

அவரை ஏலத்தில் வாங்குவதற்கு டில்லி கப்பிட்டல்ஸ், லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணிகளிடையே கடும் போட்டி நிலவியது. ஏலத் தொகை 16 கோடியைத் தாண்டிய நிலையில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி களத்தில் இறங்கி,18 கோடி இந்திய ரூபாய்க்கு அவரைத் தன்வசப்படுத்தியது.

கடந்த காலங்களில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடிய பத்திரண, தனது சிறப்பான யோர்க்கர் பந்து வீச்சின் மூலம் பெரிதும் அறியப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### இருப்பிலுள்ள...

விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்த நெல்லை பதிவு பெற்ற ஆலைகள் மூலம் அரிசியாக்கி விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அரிசி லங்கா சதொச, பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்படும்.

இவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# உலக வங்கி அறிக்கைக்குப் பின் சர்வதேச கொடையாளர் மாநாடு!

## முன்னேற்பாடுகளில் ஈடுபடுகிறது அரசு

கொழும்பு, டிசெ. 17

**சர்வதேச கொடையாளர் மாநாட்டை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து வருகின்றது. உலக வங்கியின் ஆரம்ப கட்ட மதிப்பீட்டு அறிக்கை வெளியான பின்னர் மாநாட்டுக்குரிய திகதி நிர்ணயிக்கப்படும்.**

பேரிடரால் ஏற்பட்ட இழப்புகள் மற்றும் அவற்றை மீளமைக்க ஏற்படும் செலவுகள் தொடர்பான மதிப்பீடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலக வங்கி இதற்குரிய ஏற்பாட்டை செய்துவரும் நிலையில், ஆரம்ப கட்ட மதிப்பீட்டு அறிக்கை ஓரிரு வாரங்களுக்குள் அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் உலக வங்கியிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதேவேளை, சர்வதேச கொடையாளர் மாநாட்டை நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் கோரிக்கை விடுத்திருந்தது.

சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிரணிகள் சர்வதேச கொடையாளர் மாநாட்டை நடத்துமாறு கோரியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு வந்து சேர்ந்த மனிதாபிமான உதவி



கொழும்பு, டிசெ. 17

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு மனிதாபிமான உதவி நேற்று முன்தினம் கொழும்பு துறைமுக சர்வதேச கொள்கலன் முனையத்தில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக மற்றும் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு உதவிகளைப் பொறுப்பேற்றனர்.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் பாகிஸ்தான் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி உதவிகளை கையளித்தார்.

சுமார் 200 மெற்றிக் தொன் மனிதாபிமான உதவிகள், பாகிஸ்தானின் தேசிய அனர்த்த முகாமைத்துவ அதிகார சபை மற்றும் பிரதமர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து அனுப்பப்பட்டுள்ளன.

உதவிகளில் தங்குமிடங்கள், கூடாரங்கள், போர்வைகள், உயிர்காப்பு ஜக்கெட்டுகள், படகுகள், நீர் அகற்றும் பம்புகள், மருந்துகள், பால்மா, மருத்துவ உணவுகள், நுளம்பு வலைகள் ஆகியவை அடங்கும்.

இலங்கையின் தற்போதைய அனர்த்த சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளை ஆதரிப்பதே இந்த உதவியின் நோக்கம்.

இந்த நடவடிக்கை, இலங்கை-பாகிஸ்தான் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்பை பிரதிபலிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் மனிதாபிமான அமைப்புகளுடன் இணைந்து, எதிர்வரும் நாட்களில் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

## இலங்கையில் வேகமாக பரவி வருகிறது எயிட்ஸ்!

கொழும்பு, டிசெ. 17

இலங்கையில் எச்.ஐ.வி அல்லது எயிட்ஸ் தொற்று பரவல் முன்னெப்போதும் இல்லாத வகையில் புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி 2025 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் மாத்திரம் 600க்கும் மேற்பட்ட புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு திட்டம் கவலை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் சுமார் 639 எச்.ஐ.வி அல்லது எயிட்ஸ் வழக்குகள் பதிவாகியுள்ளன.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 6 வீத அதிகரிப்பாகும்.

இக்காலப்பகுதியில் எச்.ஐ.வி அல்லது எயிட்ஸ் தொடர்பான பாதிப்புகளால் சுமார் 30 மரணங்கள் பதிவாகியுள்ளன.

தொற்றுக்குள்ளானவர்களின் தரவுகளை ஆய்வு செய்யும்போது சில முக்கிய உண்மைகள் வெளிப்படுகின்றன.

இதன்படி தொற்று பாதிப்பில் ஆண்களே முன்னிலையில் உள்ளதாகவும், ஆண்-பெண் விகிதாசாரம் 6:1 ஆக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 15 முதல் 24 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 68 ஆண்களும் 3 பெண்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், ஏனையோர் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவறான புரிதல்கள், பாதுகாப்பற்ற நடத்தைகள் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு போன்றவை இந்த அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெறுவதன் மூலம் இதன் பாதிப்பைக் குறைக்க முடியும் என சுகாதாரப் பிரிவு வலியுறுத்துகிறது. (அ)

## அனர்த்த முகாமைத்துவ பொறிமுறை படுதோல்வி

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 17

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் படுதோல்வி கண்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை மாற்றியமைத்து தற்காலத்திற்கேற்றாற் போல் இடர் முகாமைத்துவ திட்டத்தை முன்னெடுக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

“பேரழிவால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரங்கள் அழிந்துபோயுள்ளன. அதனை மீள கட்டியெழுப்ப நாம் கை கொடுக்கவேண்டும்.

மக்கள் தமது வீடுகளை இழந்திருக்கிறார்கள். பலரின் முழு வாழ்க்கையுமே அழிந்துபோயுள்ளது. களப் பயணங்களை மேற்கொண்டால் இந்த நிலையை புரிந்து கொள்ளமுடியும்.

சீரற்ற வானிலை நிலவரங்களை துல்லியமாக அறிவிப்புச் செய்யும் விதமான பயனுள்ள முன்னெடுப்புகளை நாம் ஆரம்பிக்கவேண்டும்.

நமது நாட்டுக்குத் தேவையான நவீன தொழில்நுட்ப டாப்ளர் ராடர் கருவிகள் இன்னும் இல்லை.

சுனாமியால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலியாகியுள்ள நிலையில், இடர் முகாமைத்துவ பொறிமுறையானது தோல்வி கண்டுள்ளது.

இரண்டு வார முன்னறிவிப்புகளுக்குப் பிறகும் சரியாக உரிய நடவடிக்கைகளை வகுத்துச் செயற்படுவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது.

இதனால் இலட்சக்கணக்கான மக்களின் மனித மற்றும் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு, அவர்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

## டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்டதென்னைகள் குறித்து தகவல் திரட்டல்

கொழும்பு, டிசெ. 17

டித்வா சூறாவளியால் அழிக்கப்பட்ட தென்னை மரங்கள் குறித்த தகவல்களை டிசெம்பர் 25ஆம் திகதிக்குள் வழங்குமாறு பொதுமக்களுக்கு தென்னை பயிர்ச்செய்கைச் சபை அழைப்பு விடுத்துள்ளது.

தென்னை பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர் கலாநிதி. சுனிமல் ஜயகொடி தெரிவிக்கையில்-

உள்ளூர் கிராம அலுவலர்கள் மூலம் இந்தத் தகவலுக்கான பல கோரிக்கைகள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கான நஷ்டஈட்டுத் தொகையைத் தீர்மானிக்க இந்தத் தரவுகள் பயன்படுத்தப்படும்.

அழிக்கப்பட்ட ஒரு தென்னை மரத்திற்கு ரூ. 10,000 என்ற முன்மொழியப்பட்ட மானியம் இன்னும் பரிசீலனையில் உள்ளது.

சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துத் தகவல்களையும் பரிசீலித்த பின்னரே நஷ்ட ஈடு குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும்-என்றார். (அ)

## இலங்கை மீள்கட்டுமானம் குறித்து பிரதமர்-கனடாத் தூதுவர் சந்திப்பு!



கொழும்பு, டிசெ. 17

இலங்கையை மீளக்கட்டெழுப்பும் வேலைத்திட்டத்துக்கான ஒத்துழைப்பு தொடர்பில் கனடாவுடன் இலங்கை அரசு ஆராய்ந்துள்ளது.

பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவுக்கும், இலங்கைக்கான கனடா தூதுவருக்கும் இடையிலான சந்திப்பின் போதே இது பற்றி பேசப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள அலரிமாளிகையில் நேற்று முன்தினம் மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

டித்வா சூறாவளியைத் தொடர்ந்து இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் குறித்து பேசப்பட்டது என்று பிரதமர் தெரிவித்தார்.

அத்துடன் விவசாயத் துறை மற்றும் எதிர்கால ஆசிரியர்-மாணவர் பரிமாற்றத் திட்டங்கள் உள்ளிட்ட கல்வித் துறையிலான ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

## சீ.பி ரத்நாயக்கவுக்கு பிணை!

கொழும்பு, டிசெ. 17

இலஞ்சம் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் சீ.பி. ரத்நாயக்கவுக்கு கொழும்பு பிரதான நீதவான் நேற்று பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரை தலா 20 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்லவும் சந்தேகநபர் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்குமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (அ)

## ரி-56 ரக துப்பாக்கியுடன் 64 வயது முதியவர் கைது!

### பல கொலைகளுக்கு திட்டம்

கொழும்பு, டிசெ. 17

எல்பிட்டிய - படபொல, சடாமுல்ல பகுதியில் ரி-56 ரக துப்பாக்கியுடன் ஒருவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி, 02 மகசின்கள் மற்றும் 45 தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சாதமுல்ல பகுதியை சேர்ந்த 64 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சந்தேக நபர் ஒரு திட்டமிட்ட குற்றவாளியின் நெருங்கிய நண்பர் என்றும், இந்த துப்பாக்கியைப் பயன்படுத்தி பல கொலைகளைச் செய்யத் தயாராகி வந்ததாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.